



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சுகந்திர போராட்ட வீரர் கப்பலோட்டிய தமிழன் ஐயா வ.உ.சி அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் 18/11/2025 செவ்வாய்க்கிழமை திருச்சி கோர்ட் அருகில் அமைந்துள்ள வ.உ.சி அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இந்நிகழ்வில் மாநகர செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, மாவட்டக் கழக நிர்வாகி குணசேகரன் மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன் லீலாவேலு பகுதி கழக செயலாளர் நீலமேகம் தர்மராஜ், மோகன், ராஜ்முஹம்மத், மணிவேல், விஜயகுமார்,பாபு, மற்றும் இந்நிகழ்வில் மாநில மாவட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, நகர,

# பேரூர் கழக செயலாளர்கள் - பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி, செந்தில்பாலாஜி அறிக்கை!

கரூர், நவ. 20-

கரூர் மாவட்டச் செயலாளர் செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கரூர் மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்/பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.11.2025 - வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ எம்.எல்.ஏ. கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள் : S.I.R. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.ல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் கால்பந்தாட்டப் போட்டி!

## மீ.வே.கர்ணாகரன் – ஆர்.டி.மதன்குமார் – ஆர்.ரூபேஷ் – கே.தமிழ்வாணன் பங்கேற்பு!

சென்னை, நவ.20-

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் அலமாதி ஊராட்சியில் வருகின்ற நவம்பர் 27அன்று பிறந்த நாள் காணும் துணை முதல்வர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அலமாதி ஆர்.ரூபேஷ் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் அவர்களின் ஆலோசனைபடி ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்திருவொற்றியூர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் ஒருநாள் எழுவர் கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்வில் அலமாதி ஊராட்சி மன்ற தலைவர் கே.தமிழ்வாணன் வரவேற்புரையாற்றினார்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சோழவரம் ஜெகன், ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன், காரனோடை விஜி, சிவசங்கர், ஊராட்சி கிளை கழக செயலாளர்கள் எம்.கீதா ராமன், பி.ரவி, ஜிகேபி.அசோக் சக்கரவர்த்தி, பி.பத்மநாதன், ஆர்.பிரேமா, எம்.ராஜசேகர், பி.தட்சிணாமூர்த்தி, கே.தமிழழகன், எஸ்.பக்கிரி, எஸ்.பி.புருஷோத்தமன், பாஸ்கர், கலைவாணன், வி.சன் சேகர், எம். திலீப் குமார், பிரகாஷ், மதியழகன், எம்.கவின், பி.முகேஷ் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் நடைபெற்ற கூட்டுறவுத் துறையின் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கமலக்கண்ணன், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ்,சீர்காழி நகர கழக செயலாளர் நகர்மன்ற துணை தலைவர் சுப்புராயன், சீர்காழி நகர்மன்றத் தலைவர் துர்காபரமேஷ்வரி, ராஜசேகர் மற்றும் பலர் உள்ளனர்.

## 132 வது வட்டக் கழக கூட்டம்!

சென்னை, நவ.20-

தியாகராயர் நகர் 132 வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு வேண்டுகோளுக்கிணங்க தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் ஆலோசனைக்கிணங்க 132 வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (20.11.2025 வியாழக்கிழமை) இரவு 8 மணி அளவில் காமராஜர் காலனி 6வது தெரு சி பிளாக் அருகில் வட்ட அவைத் தலைவர் புலியூர்.எம் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் தமிழக துணை முதல்வர் சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் கழக பணிகள் குறித்து ஆலோசனை வழங்கப்படுகிறது.

இந்த கூட்டத்தில் கே. ஏழுமலை, எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு. சத்தியா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே 132 வது வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.





திருப்பூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக துணைச் செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார் உள்பட மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.





அரியலூர் மாவட்டம், அரியலூர் தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 72வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு விழாப் பேருரையாற்றினார், உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, மற்றும் பலர் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில்

# பயிர்க்கடன், நகைக்கடன்கள் - ரூ.544 கோடி தள்ளுபடி!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

கள்ளக்குறிச்சி, நவ. 20 -

கள்ளக்குறிச்சி நகராட்சி, தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு (17.11.2025) அன்று திங்கள் கிழமை அன்று தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்ச்சியில் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இதன் பின்னர் இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது:

இந்தியா முழுவதும் கூட்டுறவின் செயல்பாடுகளை சிறப்புடன் வெளிப்படுத்தவும், கூட்டுறவின் சேவைகளை மக்கள் அறியச் செய்யவும், ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14 முதல் ஒருவார காலம் கூட்டுறவு வார விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா தன்னிறைவிற்கான கருவிகளாக கூட்டுறவு சங்கங்கள் என்ற பிராதான கருப்பொருளில் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

### மாணவ – மாணவிகளுக்கு பாராட்டு!

அதன் அடிப்படையில் இன்றைய தினம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விழாவில் கூட்டுறவு வார விழா போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும், கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ மாணவியர்களுக்கும், சிறந்த கூட்டுறவு சங்கங்கள், சிறந்த கூட்டுறவு நியாயவிலைக் கடை விற்பனையா ளர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பாராட்டுக் கேடயங்களும் வழங்கப்பட்டது. இதேபோன்று கூட்டுறவுத் துறையின் சார்பில் 18 பயனாளிகளுக்கு ரூ.69,21,000/ மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவித் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 116 கூட்டுறவு சங்கங்களும், 10 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளும் செயல்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 837 நியாய விலைக் கடைகளில், 4,45,000 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் 15,223 குடும்ப அட்டைகளுக்கு 3 வாகனங்கள் மூலம் கல்வராயன்மலை பகுதியில் நியாயவிலைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

57,783 விவசாயிகளுக்கு ரூ.427 கோடி பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 25,525 பயனாளிகளுக்கு ரூ.97.75 கோடி நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 1,478 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.16.38 கோடி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சுமார் ரூ.544 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 15 முதல்வர் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதுடன், இம்மருந்தகங்களில் 20 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் டெபாசிட் செய்யப்பட்டிருந்த தொகையை மீண்டும் திரும்பி வழங்கிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதேபோன்று கூட்டுறவுத் துறையில் இணைப் பதிவாளர்கள் கூடுதல் பதிவாளர்களாகவும், துணைப் பதிவாளர்கள் இணைப் பதிவாளர்களாகவும், கூட்டுறவு சார்புப் பதிவாளர்களை துணைப் பதிவாளர்களாக மாற்றியது முத்தமிழறிஞர்



டாக்டர்.கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான்.

### கூட்டுறவுத் துறையில் பல்வேறு திட்டங்கள்!

தமிழ்நாட்டில் நுகர்வோர் வாணிபக் கழகம் என ஒரு கழகத்தை உருவாக்கியதும், பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, பாமாயில், கோதுமை உள்ளிட்ட பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டதும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் குடும்ப அட்டை வழங்கும் அதிகாரம் அளித்ததும், ஒன்றரை கி.மீ. தொலைவிற்கு 150 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் ஒரு நியாய விலைக் கடை உருவாக்கப்பட்டதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான். இதுபோன்று கூட்டுறவுத் துறையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது.

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் வழியில் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் தாயுமானவர் திட்டத்தின்கீழ் 60 வயதிற்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது இருப்பிடத்திற்கே சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் அனைவரும் சேவை மனபான்மையுடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சி.பெ. முருகேசன், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர் விஜயசக்தி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் இரா.புவனேஸ்வரி பெருமாள், கள்ளக்குறிச்சி நகர்மன்ற தலைவர் இரா.சுப்பராயலு, ஒன்றியக்குழுத் தலைவர்கள் அலமேலு ஆறுமுகம், மா.சத்தியமூர்த்தி, ந.தாமோதரன், ப.ராஜவேல், திலகவதி நாகராஜன், திருக்கோவிலூர் சரகத் துணைப்பதிவாளர் செ.குறிஞ்சி மணவாளன், கூட்டுறவுத் துறை அலுவலர்கள், கூட்டுறவாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி தலைமையில், ஒன்றிய அவைத் தலைவர் தா.அற்புதராஜ், ஒன்றிய கழக செயலாளர் ச.கிரி முன்னிலையில் நடைபெற்றது. இதில் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் அ.தமிழ்மரை, குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சா.ராஜமாணிக்கம், கழக பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.பாபு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் த.பொன்ராஜ் உள்பட பாக ஒருங்கிணைப் பாளர்கள், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் கல்லாநத்தம் ஊராட்சியில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகத்தை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., திறந்து வைத்தார். அப்போது ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன், ஏ.ஏ.ஆறுமுகம், சேகர், ராஜேந்திரன் பிள்ளை, கருணாநிதி, சேட்டு, சிவாஜி, ரஞ்சித், மாதேஸ்வரன், முத்துசாமி, பெ.வெங்கடேசன், ஜோதிவேல், மனோகர், கணேசன், மோகன்ராஜ், செல்வராஜ், லோகநாதன், வெங்கடேஷ், ராஜேந்திரன், ஆறுமுகம், சேகர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.